# நூறுநாள் வேலைத்திட்டம்: நிதி வழங்காத ஒன்றிய அராஜக அரசைக் கண்டித்து தமிழ் நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!




குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பரணிபுத்தூரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு முடித்து வைத்து கண்டன உரையாற்றினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா, பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழகத்திற்கு நான்கரை மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் பணி செய்த பயனாளிகளுக்கு மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ரூ.4 ஆயிரத்தி 34 கோடி வழங்காததை கண்டித்து பித்தளைப்பட்டி பிரிவில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார். அருகில் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணை செயலாளர் மார்கிரேட் மேரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் முருகேசன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் உலகநாதன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




ஒன்றிய பா.ஜ.க. அரசு 100 நாள் வேலைக்கான நிலுவை சம்பள தொகை ரூ.4034 கோடியினை உடனடியாக வழங்கிட கோரி விழுப்புரம் தெற்கு மாவட்டம் , திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, மணம்பூண்டி ஒன்றியம், அருணாபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர் அ.சா.ஏ.பிரபு, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கோவில்பட்டியில் 100 நாள் வேலை திட்ட பணியாளர்கள் உழைப்புக்கான ஊதியத்தை வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் வீ.முருகேசன், தலைமைக் கழக பேச்சாளர் சரத் பாலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏஞ்சலா மற்றும் திமுக நிர்வாகிகள், வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.




கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியம், மோவூர் ஊராட்சியில் , தமிழ்நாட்டுக்கு 100 நாள் வேலை திட்டம் நிதியை தராமல் வஞ்சிக்கும், ஒன்றிய அரசைக் கண்டித்து, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள்,பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டனம் முழக்கமிட்டனர்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் திமுக சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான நிதி 4,034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து என்மனங் கொண்டான், ஊராட்சியில் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம். எல்.ஏ,தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,தலைமைக் கழக பேச்சாளர் வெற்றி கொண்டான் கலந்து கொண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது,இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என். ரகு, முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் ஆர் கே . கார்மேகம், துணை தலைவர் பிரவீன் தங்கம், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, மற்றும் ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், கே ஜே பிரவீன், நிலோஃபர்கான் உட்பட நிர்வாகிகள், பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




100 நாள் வேலைத் திட்டத்திற்கு பணியாளர்களுக்கு வேலைக்கு உரிய ஊதியத்தொகை வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து சிவகங்கை மாவட்டம் வ.சூரக்குடியில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் காரைக்குடி மேயர் முத்துத் துரை, துணை மேயர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, சாக்கோட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆனந்த்,மாவட்ட மகளிர் அணி தலைவி வ.சூரக்குடி எஸ். மணிமேகலை, கானாடுகாத்தான் பேரூராட்சித் தலைவி ராதிகா, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் முருகப்பன், மலர் மாணிக்கம், இந்திராணி, சாந்தி, அந்திரி, கொத்தமங்கலம் சேது, குமார், செந்தில், பிச்சை, குட்டி, பள்ளத்தூர் அசோக், மணச்சை பாண்டி, கோட்டையூர் சுப்பிரமணியன், சூரக்குடி சொர்ணம் மற்றும் ஏராளமான மகளிர் இதில் கலந்து கொண்டனர்.



விருதுநகர் சட்ட மன்ற தொகுதி விருதுநகர் வடக்கு ஒன்றியம் செங்குன்றாபுரத்தில் 100 நாள் பணிக்கான 4034 கோடியை விடுவிக்காத ஒன்றிய பிஜேபி அரசைக் கண்டித்து நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.